SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சுளுந்தீ வெளிச்சத்தில் நாயக்கர் ஆட்சிக்கால தமிழர் பண்பாட்டுச் சிதைவுகளும் ஆக்கங்களும்

முனைவர் கு. மணிகண்டன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி - 624 601, திண்டுக்கல் மாவட்டம்.

ஆய்வுச் சுருக்கம்

களப்பிரர்களின் ஆட்சிக்காலம் தமிழகத்தின் இருண்டகாலம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. களப்பிரர்கள் என்பவர்கள் தமிழ் நிலப்பரப்பை ஆண்ட வேற்று நிலத்து மன்னர்கள். இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி, இலக்கியங்கள், பண்பாடு முதலியன பின்னுக்குத் தள்ளப்பட்டன. அதேபோல், பதினாறாம் நூற்றாண்டில் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த நாயக்கர்கள் தமிழ் நிலப்பரப்பில் வாழ்ந்த தமிழ்க் குடிகளை குல நீக்கம் செய்தனர். தமிழ் மக்களை நிலமற்றவர்களாகவும் பண்பாடு அற்றவர்களாகவும் மாற்றினர். இந்த வரலாற்றைப் புனைவு வெளியில் இரா. முத்துநாகு அவர்கள் சுளுந்தீ புதினமாக படைத்துள்ளார். இவர் முன்னிறுத்தும் தமிழ்ப் பண்பாட்டுச் சிதைவுகளும் ஆக்கங்களும் ஆய்வுக்களமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள் பளியர் ,சுளுந்தீ, பூச்சுமருந்து,கன்னிவாடி,மூலிகை மருந்து,ராவுத்தர்

## முன்னுரை

மனித சமூகம் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும், இருந்த நிலையில் இருந்து மேலும் மேம்பட்ட நிலையை நோக்கி நகர்வதற்கும் பண்பாடு உதவியது. பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கலித்தொகை சுட்டுகிறது. நாகரிகமற்ற காட்டுமிராண்டி காலத்திலிருந்து மனிதர்களை நாகரிகம் உடையவர்களாக மாற்றியதில் பண்பாடு பெரும் பங்காற்றியது. நிலவுடைமைச் சமூகம் தோன்றி நாடு பிடிக்கும் நோக்கில் நடந்த போர்களால் தோல்வியுற்றவர்களின் பண்பாடு சிதைக்கப்பட்டு, வெற்றி கண்டவர்களின் பண்பாடு அவர்கள் மீது திணிக்கப்பட்டது வரலாறு நெடுகிலும் பார்க்க முடிகிறது. தமிழ் நிலப்பரப்பு மூவேந்தர்களின் ஆட்சியின் கீழ் இருந்த போது நிலவிய பண்பாடுகள் நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் சிதைக்கப்பட்டது. மதுரையை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த நாயக்கர் மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கன்னிவாடி அரண்மனையாரின் தமிழ்க் குல வெறுப்பு அரசியலையும் பண்பாட்டுச் சிதைவையும் சுளுந்தீ புதினம் முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு அமைகிறது.

## பண்பாடு - சொல் விளக்கம்

பண்பு என்ற வேர்ச்சொல்லில் இருந்தே பண்பாடு என்ற சொல் பிறக்கிறது. பண்பாடு மாறும் தன்மை கொண்டது. பண்பாடு என்பது மனம் சார்ந்தது; மனதை பண்படுத்துவது பற்றியது. பண்பாடுக் குறித்து ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

‘‘ஒரு மக்கள் குழு வாழும் முறைதான் பண்பாடு எனப்படும்.

ஒரு தனிமனிதர் தன் குழுவிடமிருந்து உள்வாங்கும் சமூகப் பாரம்பரியமே பண்பாடு எனப்படுகிறது.

வரலாறு நெடுக மனிதகுலம் கற்றுக்கொண்டவற்றின் மொத்தக் குவியலே பண்பாடு.

மனித நடத்தைகளை ஒழுங்குப்படுத்துவதற்கான ஓர் ஏற்பாடுதான் பண்பாடு.
படித்த நாகரிகமான நடத்தைதான் பண்பாடு வேற ஒண்ணுமில்லை.
நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலுடனும் சுற்றியுள்ள மனிதர்களுடனும் ஒத்திசைந்து வாழ நம்மைத் தயார் செய்யும் உத்திகள் மற்றும் தொழில்நுட்பங்களின் தொகுதியே பண்பாடு'' என்று ச. தமிழ்ச்செல்வன் (2009, ப. 3) பண்பாட்டிற்கு விளக்கம் கூறுகிறார்.

*சித்த மருத்துவமும் வலி நீக்கும் மருந்தும்*

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்களின் பணி தவிர்க்க முடியாததாக உள்ளது. சித்தர்களின் பணி அடித்தட்டு மக்களின் உயர்விற்கானது; சமத்துவத்திற்கானது; பாமர மக்களின் அறியாமையை போக்க உதவியது; நோய் நொடிக்கு ஆட்பட்ட தமிழ்க் குலங்களை காத்து உதவியது. ''யோக மார்க்கத்தில் நின்று வெற்றி (சித்தி) பெற்றவர்கள் சித்தர்கள். வைத்தியம், வாதம், யோகம், ஞானம், இரசவாதம், மாந்திரிகம், வானசாஸ்திரம், ரேகை சாஸ்திரம் முதலான பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் சித்தர்கள்'' (க. கைலாசபதி, 2008, ப. 13) என்கிறார் ஆனந்த ரவிசாஸ்திரி. இதனடிப்படையில் சித்தர்கள் மருத்துவர்களாக இருந்தனர் என்பதும் மெய்ப்பிக்கப்படுகிறது. சித்தர்கள் செய்த மருத்துவம் சித்த மருத்துவம் என்று அழைக்கப்பட்டது.

வலி நீக்கும் மூலிகை மருந்தை உருவாக்க சீந்திக்கொடி, வெள்ளருகு, நொச்சி, கருங்கொடிவேலிவேர், குல்லைப்பூ (கஞ்சா) இவற்றை மண்பானையில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு கால் படியாக வற்றும் வரை காய்த்து எடுக்கவும். வற்றி வந்த கசாயத்தை சம அளவு சுடுதண்ணீரில் கலந்து கொடுத்தால் உடம்பில் ஏற்படும் எந்த வலியையும் போக்கிட முடியும் என்பதை ராமப்பண்டுவன் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். கன்னிவாடி அரண்மனை ராணிக்கு ராசபிளவை வந்து வலியால் துடித்த போது இந்தக் கசாயமே கொடுக்கப்பட்டது. கசாயத்தைக் குடித்த ராணியின் வலி நீங்கியதாக புதினம் சுட்டுகிறது. நாயக்கர்கள் தமிழ்க் குல அழிப்பு செய்த போது சித்த மருத்துவ மரபையும் அழித்தனர் என்பதை அறியமுடிகிறது. இன்றைய ஆங்கில மருத்துவத்தின் பண்பாட்டுச் சூழலில் வாழ்கின்ற நாம் வலி நிவாரணியாக மாத்திரைகளை உட்கொள்கின்றோம். அவை மிகவும் ஆபத்தான பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்று ஆய்வுகள் சுட்டுகின்றன. நமது மரபு சார்ந்த வலி நிவாரணிகள் எந்தவித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் நோயாளியை வலியில் இருந்து மீள வைக்கிறது. ஆனால், பண்பாட்டுப் படையெடுப்புகளால் மரபு சார்ந்த மருத்துவம் தமிழ்ச் சமூகத்தாலே கேவலமாகப் பார்க்கப்படும் சூழல் இன்று நிலவுகிறது.

*பேதி இளக்கி மருந்து*

வேலிப்பருத்திக் கொடியை இலையோடு எடுத்து உரலில் போட்டு இடித்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனோடு சம அளவு வெளக்கெண்ணையை கலந்துக் குடித்தால் பேதி இளகி குடலில் கிடக்கும் அத்தனை கழிவுகளும் உடலிருந்து வெளியேறிவிடும் என்று சித்தர் வாக்காக புதினம் சுட்டுகிறது.

*ராசபிளவை பூச்சுமருந்து*

அமுக்ரா வேர், பச்சரிசி, கஸ்தூரிமஞ்சள், பழைய பட்டுத்துணி இவற்றை ஒன்று சேர்த்து மாவு போல இடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிளவை இருக்கும் இடத்தின் மேல் பொடித்து எடுத்துக் கொண்ட மருந்தை பத்துப் போல் தடவி வைத்தால் புண் விரியாமல் அடங்கி வரும். புண் உள்ளிருந்து ஆறி குணமடைய உடலுக்கு மருந்து உட்கொள்வது அவசியம். அதற்கு சித்தர்கள் பயன்படுத்திய தைலத்தின் பெயர் கருஞ்சித்திரைமூலம் தைலம். இதனை தயாரிக்க அமுக்ரா வேரையும், கருஞ்சித்திரை மூலம் வேரையும் ஒன்றாகப் பானையில் போட்டு மூடி பட்டைச் சாராயம் காச்சும் முறையில் காச்சி அதில் வடிந்தத் தைலத்தை நோய் வந்தவருக்கு அருந்தக் கொடுத்தால் உடலின் உள்ளிருந்து புண் குணமாகி வரும் என புதினம் கூறுகிறது.

*ராவுத்தரும் குதிரையும்*

தமிழ் நிலப்பரப்பு முழுவதும் சாதியப் படிநிலை ஒழுகலாறுகள் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. ஆடைகளுக்கு வர்ணம் தீட்டி வந்த தொழில் பிரிவினர் அழுக்குத் துணி வெளுக்கும் வண்ணார் சாதியாக மாற்றப்பட்டனர்.

அத்தகைய வண்ணார் சாதியைச் சார்ந்தவர்கள் தங்கள் அழுக்குப் பொதியைச் சுமந்து செல்ல கழுதையைப் பயன்படுத்துவதை நமது பண்பாட்டு மரபில் நாம் கண்டும் உணர்ந்தும் வந்திருக்கின்றோம். ஆனால், அப்பொதியைச் சுமக்கும் கழுதை நமது தேசத்தின் விலங்கு அல்ல என்பதையும் புதினம் சுட்டுகிறது. பொதி சுமக்கும் கழுதையை இந்த மண்ணிற்குத் தந்தவர்கள் ராவுத்தர்கள் தான் என்பதை "ஏ பிள்ள இந்த ஊருக்கு ராவுத்தமாரு கொண்டு வந்த கழுதை இல்லேன்னா நாம அழுக்குப் பொதி சொமந்தே உறுப்புத் தள்ளி சாக வேண்டியதுதான்"(இரா. முத்துநாகு, 2018, ப. 57) என்ற வண்ணார் சமயனின் மொழிகள் புதினத்திற்குள் புதிய பண்பாட்டுச் செய்தியை முன்வைக்கிறது.

காதுகுத்துச் சடங்கு

காது குத்தி காது வளர்ப்பது தமிழர் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. பதினேழாம் நூற்றாண்டில் கன்னிவாடி அரண்மனையின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியிலும் இப்பண்பாடு போற்றி பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பதை புதினம் விவரிக்கிறது. "கைப்படாத கத்தாள முள்ளால பச்சைப்பிள்ளைக் காதுத் தண்டுல குத்தி துளப் போடுவோம். காஞ்ச சோளத்தட்ட ஈக்குகளை உரிச்சி உள்ளிருக்கும் வெண்டினைக் காதில போட்ட துளை அளவுக்குத் திரிச்சு அதுல சொருகி விடனும் அஞ்சாவது நாள் சொருகுன வெண்ட எடுத்து எறிஞ்சு விட்டு ஏகாளியிடம் வெள்ளாவி வாசம் மாறாத துணிய வாங்கி வந்து அதத் துளை அளவுக்கு கயிறு திரிச்சி துளையில தினிச்சி விடனும்" (மேலது, ப. 76) என்று புதினத்தில் செல்லம்மாள் காது வளர்க்கும் முறையைக் கூறுகின்றார். காது வளர்கின்றவர் காதில் வெள்ளாவி வாசம் மாறாதத் துணியைக் கொண்டு துளையைப் பெரிதாக்கினர். இதில் ஓர் அறிவியல் உண்மை மறைந்து கிடக்கிறது. வெள்ளாவித்துணி காரம் கொண்டு சுத்தம் செய்யப்பட்டது. அதில் எந்தவிதமான கிருமிகளும் இருக்க முடியாது. ஒவ்வாமை இன்றி புண் விரைவாக குணமடைந்துவிடும் என்பது இச்செய்தியின் மூலம் வெளிப்படுத்துகிறது. செல்லம்மாள் கதையின் வழியே தமிழ் பேசுகிறவர்கள் தான்; காது வளர்ப்பார்கள் பிற மொழி பேசும் குலத்தினர் காது வளர்க்கும் மரபினைக் கொண்டிருக்கவில்லை என்ற செய்தியை முன்வைக்கிறார் ஆசிரியர். இங்குக் காது வளர்ப்பது தமிழ்க் குலத்தின் அடையாளக் குறியீடாகப் பார்க்கப்படுகிறது.

பளியர் பண்பாடு

பன்றி மலையில் வாழ்ந்த ஆதிக் குடிகள் பளியர்கள் என்று அழைக்கப்பட்டனர். தலைமலை, தோனிமலை, நடுமலை, கிழக்குச்சீமை, பாச்சலூர், கூளப்பள்ளம், கீழானவயல், மேலானவயல் எனப் பன்றிமலையில் எட்டு நாடுகள் இருந்துள்ளன. பளியர் குலத்தில் வெம்புலி, லெங்கம், பளியன், குசவன், கூளன், பாச்சன், தோனி என ஏழுகூட்டம் இருந்தது என்பதையும் அறியமுடிகிறது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவர் இருந்தார். அவர் ராசா என அழைக்கப்பட்டார். பளியர் கூட்டத்தின் ஆண்களுக்கு திருமண வயது வந்ததும் தனது நாட்டை விட்டு வேறு நாட்டில் வாழும் இளம் பெண்ணைத் தூக்கி வந்து தங்கள் குலதெய்வமான பளிச்சியம்மன் முன்னால் வைத்து கூனாங் கொடியை மாலையாக மாற்றி திருமணம் செய்துக்கொள்வர் எனப் புதினம் சுட்டுகிறது. பளியர் இனப் பழங்குடிகள் ஒரு போதும் சீவசந்துகளை வேட்டையாடுவதில்லை. தினையரிசி, மூங்கிலரிசி, கம்பரிசி போன்ற விளைப்பொருட்களையும், கிழங்குகளையும் உணவாக உட்கொண்டனர் என்ற செய்தியையும் அறிந்துகொள்ள முடிகிறது.

சுளுந்தீ பிடிக்கும் பண்பாடு

இரவு நேர செயல்பாட்டிற்கும், அச்சத்தைப் போக்கிக் கொள்ளவும் ஆதிமனிதனுக்கு வெளிச்சம் தேவைப்பட்டது. அதற்காக பலவிதமான ஒளியேற்றும் வழிகளைக் கொண்டிருந்தனர். பாண்டிய நாட்டில் வாழ்ந்த சாணார்கள் ஒளிப்பந்தங்கள் ஏந்தியதை "கடற்கரை நாட்டுல பனை ஓலைய தாமரைப் பூப்போல மடிச்சு அதுக்குள்ள காஞ்ச அலவர, மருந்தங்காய், புன்னவித, உப்பு, கருப்பட்டி இதுகளப் போட்டு மேல்பாகத்த மடிச்சுக்கட்டி கைப்பிடிக்கு ஏதுவாகப் பனைமட்டையக் கீழே கட்டி நெருப்பு மூட்டுவாங்க. அதுக்குப்பேரும் சுளுந்தீ. நம்ம சுளுந்தீக் குச்சியப் போல அதுவும் எரியும். மழ பெஞ்சாலும் அமராது. சாணார்கள் குலதெய்வம் பத்தரகாளி கொடைவிழாவுக்கு இந்தச் சுளுந்தீயப் பிடிச்சி போவாங்க". (மேலது, ப. 52) "பாண்டியப்

படையில இருந்த சாணார்கள் பனங்கருப்பட்டி, உப்பில் செஞ்ச சுளுந்திய போர் ஆயுதமாக வச்சிருந்தாங்க" (மேலது, ப. 215) என்ற இரு செய்திகளும் சாணார் என்ற தமிழ் இனக்குழுவின் சுளுந்தீப் பிடிக்கும் பண்பாட்டை விளக்கி நிற்கிறது.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கன்னிவாடி அரண்மனையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் இரவு நேரத்தில் ஒளியேற்ற சுளுந்தீப் பிடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. சாணார்கள் பிடித்த சுளுந்தீயைப் போலல்லாமல் மரக் குச்சிகளைப் பயன்படுத்தி சுளுந்தீயை ஏற்படுத்தினர். அந்த மரத்தினை சுளுந்தீ மரம் என்றழைத்தனர். மரத்தின் தன்மையை ஆசிரியர் இவ்வாறு காட்சிப்படுத்துகிறார். "மரங்க விளைஞ்சப் பின்னால தான் வைரம் பாயும். ஆனா சுளுந்தீ மரம் மட்டும் பூமியைவிட்டு முளைச்சு வெளியேறி தளைக்கும் போதே வைரமா வெளியேறும். சுளுந்தீ மரம் கெண்டைக் காலளவுக்கு மேல் பெருக்காது. மலை அடிவாரமும் உச்சியும் இல்லாத இடைப்பட்ட எடத்தில காக்காபின் தாது மண்வாகுள்ள நெலத்தில மட்டும் முளைக்கும் வருசக்கணக்கா மழையில்லேன்னாலும் கழுமரம் போல உசுர உள்ள வச்சுக்கிட்டே இருந்து மழ பெஞ்ச இரண்டாம் நாள் தழைக்கும் இந்தக் குச்சியில எண்ணச் சத்து இருக்கிறதால" (மேலது, ப. 140) என்ற மெய்யனின் உரையாடல் சுளுந்தீ மரத்தின் பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. கன்னிவாடி அரண்மனையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் இரவில் ஒளியேற்றவும் தீக்கங்கு கொடுக்கவும் அரசப் பிரதிநிதிகள் இருந்தனர். தீயை வெகுமக்கள் போராட்ட ஆயுதமாக மாற்றிய போது நெருப்புக்காக சுளுந்தீ குச்சிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. தமிழ்க் குலத்தினர் சுளுந்தீ ஏற்றும் பண்பாட்டை நாயக்க மன்னர்களின் சதியால் இழந்தனர்.

இறப்புச் சடங்குகள்

தமிழ்ப் பண்பாட்டுச் சுழலில் இறந்துப் போனவர்களை இறப்புச் சடங்குகளோடு புதைப்பது வழக்கம். பிற மதங்களின் கலப்பும் அடுத்தடுத்து வந்த ஆக்கிரமிப்பாளர்களும் இந்தப் பண்பாட்டு அடையாளத்தை குலைத்துப் போட்டனர் என்பதை புதினம் சுட்டுகிறது. பவுத்தர்கள் குத்த வைத்தும், சமணர்கள் சம்மணம் போட்டும் அடங்குவர். இறந்தவர் சைவம் அல்லது வைணவ சமயத்தைச் சார்ந்தவராக இருந்தால் எரியூட்டி உள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. கணவனை இழந்தப் பெண்கள் தாலி அறுத்துள்ளனர். ஊர் ஊராகச் சென்று வைணவ சமயத்தைப் பரப்பிய மத்துவச்சாரியார்கள் வழிப்போக்கில் அடங்கினால் "பரமபதம் அடைந்த இடத்திலே அடக்கம் செஞ்சு துளசி, அரளிச் செடிகள நட்டு வைப்பாங்க. அந்த இடத்திற்கு பேரு பிருந்தாவனம்" (மேலது, ப. 382). உறவுகள் பாடையில் செல்வது, பட்டம் கட்டுவது, நீர் மாலை எடுப்பது, கொள்ளி வைப்பது, குடம் உடைப்பது, பொணத்தை எடுக்க நேரம் கணிப்பது, பிறந்த வீட்டுக் கோடி வாங்குவது என்று பல்வேறு சடங்குகள் நடத்தப்பட்டதைப் புதினம் விளக்குகிறது.

உணவுப் பண்பாடு

எல்லா உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியமாகிறது. மனிதனுக்கான உணவுத் தேடல் அலாதியானது. அவனுக்கான உணவு அவன் வாழும் நிலம், சுற்றுச்சூழல், சீதோசன நிலை, இனக்குழுவின் பண்பாட்டுச் சூழல் இவற்றின் தன்மையைக் கொண்டே அமைகிறது. உலகில் தோன்றிய ஆதிக் குடிகளில் ஒன்றான தமிழ்க் குடியினர் திணை ஒழுக்கத்தின் தன்மையோடு நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உணவினைத் தேடிக் கொண்டனர் என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப" (தொல். 964)

சுளுந்தீப் புதினத்தின் கதைக்களம் மலையும் மலை சார்ந்த வாழ்வியலைக் கொண்ட குறிஞ்சி நிலமான பன்றி மலையை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும். பன்றிமலையில் வல்லை வெட்டி விவசாயம் செய்தனர் மக்கள். சிறு தக்காளி, சாமை, கம்பு, தினை, கிராம்பு, மிளகு போன்றவற்றை விளைவித்துள்ளனர். குடிமக்கள் சாமை, கம்பு, தினை போன்ற சிறு தானியங்களை உணவாக உண்டனர். பஞ்சம் ஏற்பட்ட போது அரண்மனையார் ஊத்தியக் கூழுக்காக வரிசையில் காத்துக்கிடந்தனர். ஆனந்தா வருசப் பஞ்சம் குடிமக்களை வாட்டி வதைத்தப் போது பசியைப் போக்க புளியம் விதைகளை உணவாக உட்கொண்டனர்

*என்பதையும் அறியமுடிகிறது. சித்தர் போன்ற ஞானிகள் மலையில் கிடைத்தத் தேனை உணவாக உண்டனர். சங்க காலம் தொட்டே குறிஞ்சிநில மக்கள் தேனை உணவாக உண்டனர் என்பதை,*

> *"நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்*
> *வாரசும் பொழுகு முன்றிற்*
> *தேர்வீசிருக்கை நெடியோன் குன்றே" (புறம்.114)*

*தேன் பிழிந்து எடுக்கப்பட்ட சக்கையில் இருந்து வடிந்த தேன் பரம்பு மலையில் முற்றங்களில் காணப்பட்டது என்று கபிலர் பாடுகிறார். இதிலிருந்து மலை நாட்டின் அடிப்படை உணவாக தேன் இருந்துள்ளதை அறியமுடிகிறது.*

*மண்ணின் மரபான உணவு பழக்க வழக்கத்தில் பதினேழாம் நூற்றாண்டில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பிற தேசத்தின் உணவுகள் தமிழ் மக்களின் உணவாக மாற்றம் கண்டன. இதுவரை தருமமாக கிடைத்த உணவு விற்பனைக்கு என்ற நிலையை எட்டியது. குறிப்பாக, இட்டிலி தமிழ்க் குடிகளின் உணவாக மாறிய சூழலை "நம்ம ஊரு கொழுக்கட்டை மாதிரி ஆவியில வேக வைச்ச பண்டம் அதுக்குப் பேரு இட்டிலியாம். மெதுவா பஞ்சு மாதிரி இருக்குமாம். நான் இன்னும் அதச் சாப்பிட்டது இல்ல. வடக்குத் தேசத்திலிருந்து நம்ம அரண்மன எல்லைக்குப் புதுசா வந்த ரெட்டி குலத்தினர் ஏவாரம் செய்யுராங்க என்று சொன்னான். அதுசரி பணம் கொடுத்து சாப்பிடுறாங்க. நாட்டில் இன்னமே தருமம் கிடையாதா". (இரா. முத்துநாகு, 2018, ப. 325) என்ற ராமனின் குரல் புதிய உணவுப் பண்பாட்டுக் கலப்பை முன் வைக்கிறது.*

*விதவைச் சடங்குகள்*

*கணவனை இழந்த பெண்கள் தாலியை அறுத்து வாழ்ந்ததோடு, பதிவிரதையாக வாழ்வதற்கான நடத்தை விதிகளையும் கொண்டிருந்தனர். "கணவனை இழந்த கைம்பெண்கள் தைமாத முதல் நாளன்று குலதெய்வத்தின் முன்பு ஊர் நாட்டாமை, சாமியாடி, கோடங்கி சாட்சியாக நிற்க உத்தமி சத்தியம் செய்திட வேண்டும்" (மேலது, ப. 355) கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. "ஒரு சமுதாயத்திற்குள்ளும் ஒரு குறிப்பிட்ட நெறிமுறையானது அனைவருக்கும் பொருந்தாது அல்லது அனைத்துச் சூழலுக்கும் பொருத்தமாக அமையாது. எடுத்துக்காட்டாக, தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் நடத்தைமுறைகளை வழிநடத்தும் நெறிமுறைகள் ஆண்களுக்குப் பொருந்துவதில்லை" என்ற பக்தவத்சலபாரதியின் (2009, ப. 161) கருத்து மெய்ப்பிக்கப்படுவதை உய்த்துணர்ந்து கொள்ள முடிகிறது. கணவன் இறந்த பிறகு தனது பாலியல் வேட்கையைத் தணிக்கும் பொருட்டு வேறு ஆடவரோடு உறவு கொண்டிருந்த கைம்பெண்கள் இந்தச் சத்தியத்தால் மிகவும் பாதிக்கப்பட்டனர்.*

*முடிவளர்க்கும் பண்பாடு*

*மனிதன் காடுகளிலும் மலைகளிலும் விலங்குகளைப் போல் வாழ்ந்த வாழ்வை விட்டு நாகரிகம் உடையவனாக மாறத் தொடங்கியப் போது, தன் உடல்மீது வளர்ந்த மயிரை வெட்டியும் மழித்தும் தன்னை அழகுப்படுத்த முற்பட்டான். வைதீக நெறிகளைப் பின்பற்றும் அரசுகள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த சூழலில் குடியானவனை பார்த்த உடனே அவனது சாதியை அறிந்து கொள்ளும் விதமாக மயிர் வளர்ப்பதை ஒவ்வொரு சாதிக்கும் தனித்த அடையாள விதிமுறைகள் மூலம் கட்டமைத்தனர். நாவிதர்கள் இந்த அடையாளத்தின் படியே குடிமக்களுக்கு சிரைக்க வேண்டும். "சடாமுடி வச்சிருந்தா சாமியாரு, மொட்ட போட்டிருந்தா பரதேசி, மொட்டையும் போட்டு மீசையும் எடுத்தா வைதீகப் பார்ப்பான், தலையில் குடுமி மீசையும் வைச்சா லோகீகன், முன் முடி வச்சு பின்ன செரச்சா மலையாளி, முன்ன செரச்சு பின்ன முடி வச்சா தீட்சிதன், மேல இருக்கிற குடுமி காத்துக்குப் பறக்காத அளவுக்கு அறுத்து தலையைச் சுத்தி உலமுடி மாதிரி செரச்சிருந்தா குடியானவன், நாவிதன், உன்னை மாதிரி கிருதா இல்லாம மீசை வச்சா குடிப்படை, கிருதாவும் மீசையும் வச்சிருந்தா அரண்மனைப் படை வீரன்" (இரா. முத்துநாகு, 2018, ப. 377). நாயக்கர் ஆட்சிக்காலத்தில் இந்த விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளதும் விதிமுறைகளை பின்பற்ற மறுத்தவர்கள் குலநீக்கம் செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

புணர்ந்து புதைத்தல்

மூவேந்தர்கள் ஆட்சி செய்த நிலப்பரப்பு முழுவதும் வாழ்ந்த தமிழர்கள் பின்பற்றியப் பண்பாட்டை தமிழர் பண்பாடு என்றே சொல்கிறோம். மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி மலர்ந்த பின்னர் மொழிவழி மாநிலங்கள் தோற்றம் கண்டன. இன்றைய கேரளம் சேர மன்னர்கள் ஆண்ட தமிழ் நிலப்பரப்பாக இருந்த பகுதி என்பது வரலாற்று உண்மை. வைதீக மதங்களின் ஆதிக்கமும் சாதிய ஏற்றத் தாழ்வுகளும் இறுக்கமாக இருந்த பூமி கேரளம். சாதியப் படிநிலையில் மேல் நிலையில் இருந்த நம்பூதிரிகள் தங்கள் சாதியை உயிர்ப்புடன் வைத்துக் கொள்ள தங்கள் சாதிக்கென்று பல்வேறு நடத்தை விதிகளை வகுத்து நடைமுறைப்படுத்தினர். பெண்களுக்கு உருவாக்கப்பட்ட விதிகளால் நம்பூதிரி வீட்டுப் பெண்கள் தங்கள் சாதிக்குள் திருமணம் செய்ய முடியாமல் முதிர்க் கன்னிகளாகவே வாழ்ந்து மறைந்தனர். கன்னிகளாகவே மறைந்த பெண்களால் தெய்வக்குற்றம் ஏற்படும் என்று அச்சப்பட்டு அவர்களுக்கு பல இறப்புச் சடங்குகளை நிகழ்த்தினர் நம்பூதிரிகள். அதில் ஒன்று தான் புணர்ந்து புதைக்கும் சடங்கு. பேச்சுவழக்கில் இருக்கும் கெட்ட வார்த்தையின் மூலம் முத்துநாகு இப்பண்பாட்டை வெளிப்படுத்துகிறார். ‘‘பட்டிவீரனின் தாத்தன் மன்னவனூர் சேர வம்சாவழி எல்லையில் வாழ்ந்தவன். சேர வம்சாவழியில் கலியாணம் முடிக்காத பொம்பள செத்துப் போனா அந்தப் பொண்ண புணர்ந்து புதைப்பது பழக்கம். இப்படி புணரதுக்காக சுடுகாட்டில வட பக்கம் மறவான மேடு அமைத்திருப்பாங்க. அந்த இடத்துக்கப் பேரு வெங்க மேடு. பொணத்தோடு புணருபவனுக்கு வெங்கம் பயன்னு பேரு. இப்படி வெங்கம்பயனா இருந்தவன் பட்டி வீரனோட தாத்தன்’’ (மேலது, ப. 132) இன்று வழக்கொழிந்து போன பண்பாடாக இது காணப்பட்டாலும் நாம் பேசும் இத்தகைய வசைச் சொற்களுக்குள் நம் வரலாறும் பண்பாடும் புதைந்து கிடப்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

தமிழர்களுக்கென்று தனித்தப் பண்பாட்டு அடையாளத்துடன் கூடிய சித்த மருத்துவ மரபு இருந்ததை அறியமுடிகிறது. வண்ணார், நாவிதர் போன்ற சாதியினர் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு உதிரிகளாக்கப்பட்டுள்ளனர். காதுகுத்துப் போன்ற பண்பாட்டுச் சடங்குகள் எல்லாக் குடிகளுக்குமான சடங்காக மாற்றப்பட்டுள்ளது. பழங்குடிகளான பளியர்கள் தங்களது பூர்வீகப் பண்பாட்டை இழந்துள்ளனர். தமிழர்களின் தனித்த உணவுப் பண்பாடு சிதைக்கப்பட்டு புதிய உணவுப் பண்பாடு உருவானதைக் காணமுடிகிறது. தமிழ்க் குடிகள் சாதியின் தகுதிக்கேற்ப சிரைக்கவும் முடி வெட்டவும் வளர்க்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்நாவலின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல்


ஆனந்த ரவிசாஸ்திரி. (2008). சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகள். சென்னை: பாவை பப்ளிகேசன்ஸ்.

தமிழ்ச்செல்வன், ச. (2009). எது கலாச்சாரம்? சென்னை: பாரதி புத்தகாலயம்.

பக்தவத்சல பாரதி. (2009). பண்பாட்டு மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

பெருமாள் சாமி, வெ. (2007). சங்க காலத் தமிழகத்தின் சமூக நிலை. சென்னை: பாரதி புத்தகாலயம்.

முத்துநாகு. இரா. (2019). சுளுந்தீ. திருவண்ணாமலை: ஆதி பதிப்பகம்.

ஸ்டீபன், ஞா. (2017). தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.


********* ********* ********** ********* ********* ********** ********** **********